# திருப்பூர் மாநகராட்சி

**2018 ஏப்ரல் மாதம் 04–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

## 238 முதல் 253 வரை

**27–04–2018–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

## 254 முதல் 263 வரை

**திருப்பூர் மாநகராட்சி**

**2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**238)** 1. Resolved to implement " New water Supply scheme for Tiruppur City Municipal Corporation" at a cost of Rs.992.94 crore and to avail GOI and GoTN grant of Rs. 695.06 crore under the Atal Mission for Rejuvenation and Urban Transformation (AMRUT) as per ( AMRUT ) as per AMRUT guidelines as well as the terms and conditions prescribed by TUFIDCO.

| Name of the project / Scheme No. | Approved Cost | GOL Share (50%) | GTN Share (20%) | *ULB share (30%) |
|---|---|---|---|---|
| New Water Supply Scheme to Tiruppur City Municipal Corporation ( Scheme No. AMRUT III – 37) | **992.94** | 496.47 | 198.59 | 297.88 |

- ULB – Share – The Tiruppur City Municipal Corporation has to raise the entire ULB share Rs.297.88 crore from ADB Loan / Grant.

2. Resolved that the ULB agrees the terms and conditions mentioned in the sanction letter and agrees to execute the project as per the AMRUT guideline.

3. Further resolved that the ULB agree to increase the water charges as detailed below.

| Water Charges | |
|---|---|
| Domestic | Non-Domestic |
| Rs. 200/- per month | Rs. 600/- per month |

Subject placed before the council for approval.

**Office Note :** Subject may be approved. ( E.1/**4814 / 2018)**

\- - - - -

## Resolution : Subject approved.

\- - - - -

**239)** 1. Resolved to implement at a cost of Rs.525.92 Cr. and to avail GOI and GoTN grant Rs.368.14 crore under the Atal Mission for Rejuvenation and Urban Transformation (AMRUT) as per ( AMRUT) as per AMRUT guidelines as well as terms and conditions prescribed by TUFIDCO.

| Name of the project / Scheme No. | Approved Cost | GOL Share (50%) | GTN Share (20%) | *ULB share (30%) |
|---|---|---|---|---|
| Providing underground Sewerage scheme in left – out area of Tiruppur City Municipal Corporation ( Scheme No. AMRUT III – 38) | **525.92** | **262.96** | **105.18** | **157.78** |

**239-continued**

- ULB – Share – The Tiruppur City Municipal Corporation has to raise the entire ULB share Rs.157.78 crore from external funding agency / AADB.

2. Resolved that the ULB agrees the terms and conditions mentioned in the sanction letter and agrees to execute the project as per the AMRUT guideline.

3. Further resolved that the ULB agree to fix the sewage charges as detiled below as mentioned in the DPR Proposed UGD charge Tariff.

| Domestic | | Non-Domestic | |
|---|---|---|---|
| Deposit in Rs. | Charges per year in Rs. | Deposit in Rs. | Charges in Rs. |
| 6000/- | 1440/- to 2400/- | 15000/- | 2400/- to 36000/- |

Subject placed before the council for approval.

**Office Note :** Subject may be approved. ( E.1/4813 / 2018)

- - - - -

## Resolution : Subject approved.

- - - - -

**240)** திருப்பூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மான எண். 38, நாள் 01–02–2017ல் திருப்பூர் மாநகர பகுதிகளில் உள்ள சாலைகள் மேம்பாடு செய்தல், புதிய இணைப்பு சாலைகள் அமைத்தல் மற்றும் பாலங்கள் அமைக்க நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 59 சாலை, வடிகால் மற்றும் சிறுபாலங்கள் ரூ.6755.94 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகளுக்கும், 3 இடங்களில் ரூ.370.50 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்கள் கட்டவும் ரூ.7126.44 இலட்சம் மான்யமாக வழங்க கேட்டு தீர்மானிக்கப்பட்டவாறு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். இ.1/671/2017 நாள் 02–02–2017ல் இக்கருத்துரு நகர் ஊரமைப்பு துறையின் 15வது குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு 11ம் எண்ணுள்ள பொருளில் மூன்று உயர்மட்ட பாலங்கள் ரூ.370.50 இலட்சத்தில் கட்ட அனுமதியும், ரூ.6755.94 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் பணிகளுக்கு ரூ.10.00 கோடி மட்டும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி ரூ.10.00 கோடிக்கு உரிய சாலை, வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் பணிகளுக்கு திருத்திய கருத்துரு அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது. எனவே பின்வரும் பணிகளை அவற்றுக்கெதிரே குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டில் செய்ய கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 21 | கஞ்சம்பாளையம் பகுதியில் நல்லாறு ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் | 118.50 |
| 2. | 50 | தென்னம்பாளையம் காலனி மற்றும் ஆர்.வி.இ.லே அவுட் பகுதியினை இணைக்க சங்கிலி பள்ளம் ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் | 125.00 |
| 3. | 53 | வீரபாண்டி கல்லாங்காடு சாலையில் கருப்பகவுண்டம்பாளையம் பகுதியில் சங்கிலி பள்ளம் ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் | 127.00 |
| | | **மொத்தம்** | **370.50** |
| | | **சாலைப் பணிகள்** | |
| 4. | 3 | வார்டு எண்.3 அன்னையம்பாளையம் மெயின்ரோடு மற்றும் அன்னையம்பாளையம் மெயின்ரோடு முதல் NSP (OHT) வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி மறு தார்தளம் அமைத்தல். | 77.50 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 5. | 3 | வார்டு எண்.3 அண்ணா நெசவாளர் காலனி முதல் வீதியில் மழைநீர் வடிகால் கட்டி புதிய தார்தளம் அமைத்தல் மற்றும் மாநகராட்சி பள்ளி வீதியில் தார்தளம் அமைத்தல். | 43.00 |
| 6. | 7 | வார்டு எண்.7 சக்தி தியேட்டர் குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி மறுதார்தளம் அமைத்தல் ( கொங்கு வேளாளர் பள்ளி முதல் சக்தி தியேட்டர் மெயின்ரோடு வரை) | 22.75 |
| 7. | 10 | வார்டு எண்.10 காந்தி நகர் 80அடி ரோடு அகலப்படுத்தி மறுதார்தளம் அமைத்தல் | 74.00 |
| 8. | 13 | வார்டு எண்.13 சரண் தியேட்டர் முதல் திரு.வி.க.நகர் வரையில் உள்ள 40 அடி சாலைக்கு புதிய தார்தளம் அமைத்தல் | 32.50 |
| 9. | 20 | பி.என்.ரோடு முதால் நஞ்சப்பா நகர் ரோடு வரை புதிய தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் கட்டுதல் | 79.00 |
| 10. | 21 | கவுண்டநாயக்கன்பாளையம் முதல் தொட்டி மண்ணரை AD காலனி வரை மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் சாலையினை அகலப்படுத்தி மறுதார்தளம் அமைத்தல் | 100.00 |
| 11. | 30 | கங்கா நகர் வடக்கு வீதியில் புதிய தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் வடக்கு தெற்கு, கிழமேற்கு பிரதான சாலையில் புதிய தார்தளம் அமைத்தல் | 71.00 |
| 12. | 33 | ராஜீவ் நகர் 3வது மற்றும் 4வது வீதியில் தார்தளம் அமைத்தல் | 29.50 |
| 13. | 34 | வி.ஜி.வி. கார்டன் 26வது, 27வது மற்றும் கிழக்கு குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 19.70 |
| 14. | 35 | சென்னிமலைபாளையம் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 29.90 |
| 15. | 36 | ஜி.என்.கார்டன் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 22.50 |
| 16. | 40 | கே.என்.பி. சுப்பிரமணியம் நகர் முதல் நாராயணசாமி நகர் வரை RCC வடிகால் கட்டுதல் | 73.40 |
| 17. | 41 | செரங்காடு 2வது மற்றும் 3வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 29.90 |
| 18. | 44 | நொய்யல் பள்ளி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 21.00 |
| 19. | 44 | சுகுமார் நகர் பள்ளி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 24.10 |
| 20. | 50 | இ.பி. நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி புதிதாக தார்தளம் அமைத்தல் | 29.00 |
| 21. | 51 | இ.பி. நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி புதிதாக தார்தளம் அமைத்தல் மற்றும் வெள்ளியங்காடு 60அடி சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 89.00 |
| 22. | 52 | அருண்நகர் மற்றும் ஸ்ரீநிவாசா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி புதிதாக தார்தளம் அமைத்தல் | 67.00 |
| 23. | 59 | சின்னாண்டிபாளையம் மெயின்ரோடு (இடுவம்பாளையம் மெயின் ரோடு முதல் முத்துநகர் புதிய பாலம் வரை ) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி சாலை அகலப்படுத்தி மறுதார்தளம் அமைத்தல் | 71.00 |
| | | **மொத்தம்** | **1005.75** |

மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட கருத்துருவை நிர்வாக அனுமதிக்காக மேலனுப்பி வைக்கலாம். அனுமதிக்கப்படும் மான்ய தொகைக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்திற்கு மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 671 / 2017)

– – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

———–

**241)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் நேர்முக கடித எண். 1588/2015 / ஜே.1, நாள் 15.06.2015, 28.03.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண். 2571 / J 1 / 2017 நாள் 14–02–2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த, தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு/தனியார் மருத்துவமனைகளிலிருந்துதினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் Hot Spotஆக கண்டறியப்பட்ட வார்டுகள் மற்றும் இதர டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட பகுதிகளிலும் ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணி புரிய ஏதுவாக மண்டலம் ஒன்றுக்கு 75 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01–04–2018 முதல்30–04–2018 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள்/இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேசசெலவீனம் ரூ.24.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01.04.2018 முதல் 30.04.2018 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 /1446 / 2018 )

– – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

——————

**242)** திருப்பூர் மாநகராட்சியில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டம் 2013–14ம் ஆண்டின் கீழ் 147.00 இலட்சம் மதிப்பீட்டில் மண்டலம் 1–க்குட்பட்ட மூகாம்பிகை நகர் பகுதியில் 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர் தொட்டி கட்ட 17.02.2014ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திருவாளர் Brigap Infra சென்னை நிறுவனத்தாருக்கு ரூ.1,47,67,300/– ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் பணியை 12 மாத காலத்தில் செய்து முடிக்க 31.03.2015ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

27.05.2017 வரை ஒப்பந்ததாரர் ரூ. 56,09,527/– செலவினத்தில் பணியை செய்து முடித்து அதில் ரூ.42,91,743/– தொகையை பெற்றுள்ளார். மீதம் ரூ.13,17,784/– வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் தொடர்ந்து பணியை ஒப்பந்ததாரர் செய்யவில்லை. எனவே பணி தொடர்ந்து செய்ய அறிவிப்புகள் வழங்கப்பட்டது.

**242–ன் தொடர்ச்சி**

இறுதி அறிவிப்பை 13.12.2017ம் தேதியன்று திருவாளர் Brigap Infra சென்னை பெற்றுக் கொண்டதற்கு ஏற்பளிப்பு அளிக்கப்பட்டது. திருப்பூர் மாநகராட்சி தீர்மானம் எண்.180 நாள் 22.12.2017ம் தேதியில் பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் எஞ்சியுள்ள பணிகளுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்ததாரர் வைப்புத் தொகை மற்றும் வழங்கப்பட வேண்டிய தொகை போன்றவற்றை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் ஈடுசெய்யவும் மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பு (ரூ. 56,09,527/–) ரூ.56.10 இலட்சம் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.110/– இலட்சம் சேர்ந்து ரூ.166.10 இலட்சத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது. நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், அரசு மான்யம் தவிர்த்து கூடுதல் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். **( இ.1 / 2036 / 2018)**

– – ––

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

–––––

**243)** சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் (தெற்கு) தொகுதி வளர்ச்சி நிதியின் (2016–17)–ன் கீழ் வார்டு எண்.44, நொய்யல் வீதி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.14,80,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 17–04–2017 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 23–05–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை 1% |
|---|---|---|---|---|
| 1. | திரு A. செந்தில்குமார் | 15,36,975/– | மதிப்பீட்டு விலையை விட 6.04% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திரு A. ராஜேஷ்குமார் | 15,75,075/– | மதிப்பீட்டு விலையை விட 8.67% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு A. செந்தில்குமார் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 60 / S / 2017–18 நாள் 26–05–2017–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 29–05–2017ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.1ல் ரூ.120/–க்கு பகுதிலாக ரூ.100/–க்கும், இனம் எண்.4ல் ரூ.6200/–க்கு பகுதிலாக ரூ.6000/–க்கும், மற்றும் இனம் எண்.9ல் ரூ.76/–க்கு பகுதிலாக ரூ.72/–க்கும், விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு A. செந்தில்குமார் (விலைக்குறைப்புக்கு பின்) | 15,20,875/– | மதிப்பீட்டு விலையை விட 4.93% அதிகம் |

**243–ன் தொடர்ச்சி**

திட்டப் பணியாகவும், கட்டிடப் பணியாகவும் உள்ளதால், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.93% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும், கூடுதல் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டியும், மாமன்றத்திற்கு பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருட்கள் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாக உள்ள காரணத்தாலும், நடப்பாண்டு ( 2017–18) செந்தூரப் பட்டியல் விரைவில் வெளிவர உள்ளதாலும், விலைக்குறைப்புக்கு பின் விலையை விட 4.93% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினத்தை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( ம.எண். 60 / S / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

——————

**244)** திருப்பூர் மாநகராட்சி வைப்பு நிதி & குடிநீர் நிதியின் கீழ் மண்டலம் –IV–ல் 2 பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன. மேற்படி பணிகளின் மதிப்பீட்டிற்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.97 மற்றும் 98, நாள் 19–06–2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து 17–08–2017 அன்று மேற்படி 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 17–08–2017 அன்று மேற்படி இரண்டு பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையைவிட) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்கு பின்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 53 | வீரபாண்டி பகுதியில் உள்ள நிலமட்டத் தொட்டியிலிருந்து வஞ்சி நகர் பகுதியில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்கு மாடிக் குடியிருப்பு வளாகம் வரை குடிநீர் குழாய் பதித்தல் (மதிப்பீடு ரூ.99.50 லட்சம்) | M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.89,43,561/– 6.02% அதிகம் | ரூ.88,51,137/ 4.92% அதிகம் |
| | | | திரு சி. ராமசாமி | ரூ.90,54,400/– 7.33% அதிகம் | ––– |
| 2. | 53 | வார்டு எண்.53, வீரபாண்டி பகுதியில் புதிதாக 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலமட்டத்தொட்டி கட்டுதல் மற்றும் மின்மோட்டார் பொருத்துதல் (மதிப்பீடு ரூ. 52.00 லட்சம்) | M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.48,70,155/– 5.99% அதிகம் | ரூ.48,22,430/ 4.95% அதிகம் |
| | | | திரு சி. ராமசாமி | ரூ.49,94,266/– 8.69% அதிகம் | ––– |

<u>244–ன் தொடர்ச்சி</u>

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்படி பணிகள் அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம்.

(ம.எண். 84 / S / 2017-18)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**245)** வார்டு எண்.45, பழைய பேருந்து நிலைய பகுதியில் தென்புறமுள்ள பொள்ளாச்சி, பல்லடம் செல்லும் பேருந்துகள் நிறுத்தும் கடைகளுடன் கூடிய வளாகத்தினை பழுதுபார்த்தல் பணி செய்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.24,90,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதையடுத்து21.11.2017அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை 1% |
|---|---|---|---|---|
| 1. | திரு S. செல்வராஜ் | 24,25,525/– | மதிப்பீட்டு விலையை விட 0.13% குறைவு. | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 24,38,505/– | மதிப்பீட்டு விலையை விட 0.41% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான திரு S.செல்வராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.13%குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம்.

(ம.எண். 115 / S / 2017 – 18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**246)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.45, பழைய பேருந்து நிலைய வளாகத்தில், காய்ந்துவிட்ட வேம்பு மற்றும் வாகை ஆசிய 2 மரங்கள் சாய்ந்துவிட்டன. இவற்றை அப்புறப்படுத்துவதற்கு ஆணையரின் அனுமதி பெற்று 11–12–2017 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. இதில் 4 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் A. சுரேஷ் திருப்பூர் அவர்கள் அதிகபட்ச ஏலக்கேள்வியாக ரூ.3200/– கோரி மாநகராட்சியில் தொகை செலுத்தியுள்ளார். மேற்காண் தொகை சந்தை நிலவரப்படி உள்ளதால் இதனை ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) அனுமதி வழங்கலாம்.
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். (இ.5 / 4283/17–2)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

——–––

**247)** திருப்பூர் மாநகராட்சி, மூன்றாவது மண்டல அலுவலகப் பகுதியில், AMRUT திட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிலமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டப்படவுள்ளது. அந்தப் பகுதியில், ஓட்டுவில்லை மேற்கூரை கட்டிடம் உள்ளது. இக்கட்டிடம் மிகப்பழமையானதால் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

மேற்காண் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு, அனுமதி பெற்று 20–12–2017 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. இதில் 5 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் திரு S.பால்ராஜ், திருப்பூர் அவர்கள் அதிகபட்ச ஏலக்கேள்வி ரூ.1950/– கோரி, மாநகராட்சியில் தொகை செலுத்தியுள்ளார். மேற்காண் தொகை சந்தை நிலவரப்படி உள்ளதால், இதனை ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) அனுமதி வழங்கலாம்.
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். (இ.2 / 1980/2017–ம.3)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

——–––

**248)** திருப்பூர் மாநகராட்சிக்கு AMRUT 2017–20 திட்டத்தின் கீழ் ரூ.332.468 இலட்சம் மதிப்பீட்டில் 6 பூங்காக்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள TUFIDCO நிறுவனத்தாரால் 20.11.2017ம் தேதிய கடிதம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி 6 பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.160, 29.11.2017 வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மண்டலம் -III மற்றும் IV–க்குட்பட்ட 4 பணிகளுக்கு 28.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 28.12.2017 அன்று 4 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**248–ன் தொடர்ச்சி**

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்கு பின்) |
|---|---|---|---|---|---|
| | | | | (மதிப்பீட்டு விலையைவிட) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 32 | KNS கார்டன் பகுதியிலுள்ள பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் (மதிப்பீடு ரூ.64.928 இலட்சம்) | M/s.ஸ்ரீசிவராம் அன் கோ., | ரூ.57,96,760/– 6.30% அதிகம் | ரூ.57,22,780/– 4.94% அதிகம் |
| | | | திரு A.செந்தில்குமார் | ரூ.60,70,,840/– 11.33% அதிகம் | ––– |
| 2. | 52 | ஜோதி நகர் பகுதியிலுள்ள பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் (மதிப்பீடு ரூ.59.028 இலட்சம்) | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.51,22,602/– 6.10% அதிகம் | ரூ.50,67,322/ 4.96% அதிகம் |
| | | | திரு சி. ராமசாமி | ரூ.53,74, 695/– 11.32% அதிகம் | ––– |
| 3. | 53 | முத்துநகர் பகுதியிலுள்ள பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் (மதிப்பீடு ரூ.45.328 இலட்சம்) | M/s. சிவசக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.40,84,515/– 6.24% அதிகம் | ரூ.40,33,565/ 4.92% அதிகம் |
| | | | M/s. செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.42,88,320/– 11.54% அதிகம் | ––– |
| 4. | 56 | கே.ஆர்.ஆர். தோட்டம் பகுதியிலுள்ள பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல்(மதிப்பீடு ரூ.60.928 இலட்சம்) | M/s. செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.53,81,150/– 6.20% அதிகம் | ரூ.53,17,880/ 4.95% அதிகம் |
| | | | M/s. V.S.M. கன்ஸ்ட்ரக்சன்ஸ் | ரூ.56,78,865/– 12.08%அதிகம் | ––– |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி பணிகள் திட்டப் பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாகவும், 5.00%க்கு குறைவாகவும் உள்ளதால் கலம் எண்.6ல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம். (ம.எண். 150 / S / 2017 –18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

––––––

**249)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் ( TURIP) 2017–18ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 21422 / 2017 / E.3, நாள் 03.10.2017 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.10.00 கோடி மதிப்பீட்டிற்கு சாலைப் பணிகள் 2 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு தலைமைப்

**249–ன் தொடர்ச்சி**

பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண். 24545/2017/DO1, நாள் 16–11–2017 வாயிலாக தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி 2 பணிகளுக்கும் 08.01.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி சிப்பம் எண்.2, வார்டு எண்.34, பச்சையப்பா நகர் 1வது, 2வது வீதியில் தார் சாலையினை அகலப்படுத்தி மறு தார்தளம் அமைத்தல், வார்டு எண்.36, காட்டுப்பாளையம் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண். 38, பொன்சுப்புநகர் மற்றும் நல்லூர் வடக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.39, சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை, ஆர்.வி.இ. நகர் 9வது வீதி மற்றும் எம்.சி. நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.40, என்.பி. நகர் விரிவு கிழக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.44, மிசன் வீதி மற்றும் சுகுமார் நகர் 1வது குறுக்கு வீதி முதல் 9வது குறுக்கு வீதி வரை உள்ள சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.51, பி.கே.ஆர். லே–அவுட் 2வது, 3வது, 4வது, 7வது வீதிகள் மற்றும் வினோபா நகர் 1வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.51, ஊர்கவுண்டர் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.53, கருப்பகவுண்டன்பாளையம் பிரதான சாலை பலவஞ்சிபாளையம் ரிங் ரோடு வீரபாண்டி முதல் ஆதவன் நகர் ( சங்கிலி பள்ளம் ஓடை) வரை தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.56, செல்லம் நகர் 3வது வீதி மற்றும் குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.56, கே.ஆர்.ஆர். தோட்டம் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.57,தந்தை பெரியார் நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–) 08.01.2018 அன்று திரு A.மதுரைவீரன் மற்றும் M/s. ஸ்ரீசாயிஅசோசியேட்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 10.01.2018 அன்று திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் திரு A. மதுரைவீரன் மற்றும் M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 17.01.2018 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை 1% |
|---|---|---|---|---|
| 1. | திரு A. மதுரைவீரன் | 4,41,33,033/– | மதிப்பீட்டு விலையை விட 5.55% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 4,52,70,947/– | மதிப்பீட்டு விலையை விட 8.27% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு A. மதுரைவீரன் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 315/2017–18 / CE ( CMA) நாள் 19.01.2018ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தங்களது 22.01.2018ம் தேதிய கடிதத்தில் இனம்

**249–ன் தொடர்ச்சி**

எண்.2ல் ரூ.80/–க்கு பதிலாக ரூ.75/–க்கும், இனம் எண்.4ல் ரூ.1350/–க்கு பதிலாக ரூ.1290/–க்கும், இனம் எண். 8–ல் ரூ.15/–க்கு பதிலாக ரூ.14/–க்கும் மற்றும் இனம் எண்.9ல் ரூ.6650/–க்கு பதிலாக ரூ.6573/–க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு A. மதுரைவீரன் ( விலைக்குறைப்புக்கு பின்) | 4,38,88,550/– | மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.96% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளலாம் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும் மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

( ம.எண். 315 / 2017 – 18 / CE (CMA)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

———–

**250)** திருப்பூர் மாநகராட்சியில் மண்டலம் -IVக்குட்பட்ட கீழ்கண்ட 2 பணிகளுக்கு ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு பொது நிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து, 18–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 2 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையைவிட) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்கு பின்) (மதிப்பீட்டு விலையைவிட) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 48 | வார்டு எண்.48, ஜெய்வாபாய் பள்ளி வளாகத்தில் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கட்டிடத்திற்கு கூடுதல் மின்சாதன வசதிகள் செய்தல் மற்றும் NGM வளாகத்தில் பெயின்டிங் | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | ரூ.8,57,370/– 5.01% அதிகம் | ரூ.8,56,200/ 4.86% அதிகம் |
| | | | திரு S. செல்வராஜ் | ரூ.8,76,016/– 7.29% அதிகம் | ––– |

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்கு பின்) |
|---|---|---|---|---|---|
| | | | | (மதிப்பீட்டு விலையைவிட) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | பணி மற்றும் ரோட்டரி பள்ளி கட்டிடத்திற்கு மேற்கூரை அமைத்தல் மற்றும் கூடுதல் பணிகள் செய்தல் (மதிப்பீடு ரூ.9.80 இலட்சம்) | | | |
| 2. | 48 | வார்டு எண்.48, ஜெய்வாபாய் பள்ளி வளாகத்தில் ரோட்டரி பள்ளி கழிவறைகள் சிறப்பு மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் (மதிப்பீடு ரூ.8.90 இலட்சம்) | திரு S. செல்வராஜ் | ரூ.7,72,130/– 5.06% அதிகம் | ரூ.7,70,430/ 4.83% அதிகம் |
| | | | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | ரூ.7,86,242/– 6.98% அதிகம் | --- |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்படி பணிகள் அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.86%க்குள் அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம்.
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம்.

(ம.எண். 188 / S / 2017-18)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

------

**251)** வார்டு எண்.45, முத்துப்புதூர் பள்ளியில் புதிதாக கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.12,00,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி 20.12.2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 14.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை 1% |
|---|---|---|---|---|
| 1. | திரு S. செல்வராஜ் | 10,12,421/– | மதிப்பீட்டு விலையை விட 5.22% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 10,45,363/– | மதிப்பீட்டு விலையை விட 8.64% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

**<u>251–ன் தொடர்ச்சி</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால் மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு S. செல்வராஜ் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண்.199/S/2017–18, நாள் 23.02.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 27.02.2018ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.9ல் ரூ.70/–க்கு பதிலாக ரூ.68/–க்கு மற்றும் இனம் எண்.21ல் ரூ.3750/–க்கு பதிலாக ரூ.3600/–க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு S. செல்வராஜ் (விலைக்குறைப்புக்கு பின்) | 10,09,875/– | மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.95% அதிகமாப இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருட்கள் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாக உள்ள காரணத்தாலும், திட்டப்பணியாகவும், கட்டிடப் பணியாகவும் உள்ளதாலும், விலைக்குறைப்பிற்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.95% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

( ம.எண்.199 / S / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

—————

**252)** திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்குட்பட்ட திருப்பூர் மாநகராட்சி மண்டலம் –IV வீரபாண்டி கிராமம் , க.ச.எண். 390/2A1B, 2A2B, 2B2, 392 / 2B மற்றும் 392 / 5B2, ஆகிய புல எணகளின் உரிமையாளரான திரு எஸ். வெங்கடேஷ் த/பெ. சுப்பையன் என்பவர், அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்ட பகுதியில் இடம் பெற்றுள்ள தமது 2.67 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை கலப்பு குடியிருப்பு பகுதியிலிருந்து பொது தொழிற்சாலை பகுதியாக நிலபயன்பாடு மாற்றம் கோரி விண்ணப்பித்ததின் பேரில் திருப்பூர் மாநகராட்சியின் பரிந்துரை கோரி திருப்பூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்கள் தமது கடிதம் ந.க.எண். 462 / 2017 / தி.உ.தி.கு. நாள் 03.03.2018ல் கோரியுள்ளார்.

வீரபாண்டி கிராமம் க.ச.எண். 390/2A1B, 2A2B, 2B2, 392 / 2B மற்றும் 392 / 5B2ல் 2,67 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம், மறு ஆய்வு ஒப்புதல் பெற்ற திருப்பூர் முழுமைத் திட்டத்தில் கலப்பு குடியிருப்பு ( MR – 37) பகுதியில் அமைகிறது. பிரஸ்தாப இடத்திற்கு மேற்கு மற்றும் கிழக்கு பகுதியில் தொழிற்சாலை கட்டிடங்களும், வடபுறத்தில் தோப்பு பகுதிகளாகவும், தென்புறம் வறண்ட நிலமும் ( Dry Land) மற்றும் தோப்பும் அமைந்துள்ளது. குடியிருப்பு பகுதிகள் ஏதும் அருகில் அமையவில்லை. மேலும் மாநகராட்சியின் தெற்கு எல்லைப் பகுதியாகவும் அமைகிறது.

**<u>252–ன் தொடர்ச்சி</u>**

மனைக்கு 12.6 மீ அகலமுள்ள வீரபாண்டி – ஆவரப்பாளையம் தென்வடல் தார் சாலை அணுகுபாதையாக அமைகிறது. மேற்படி சாலை மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. எனவே மனுதாரர் கலப்பு குடியிருப்பு பகுதியிலிருந்து பொது தொழிற்சாலை பகுதியாக நில உபயோக மாற்றம் கோரும் விண்ணப்பத்தினை நில உபயோக மாற்றம் செய்வது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

கலப்பு குடியிருப்பு பகுதியிலிருந்து பொது தொழிற்சாலை பகுதியாக நில உபயோக மாற்றம் செய்ய பரிந்துரை செய்யலாம். (இ.1 / 470 / 2018 / ம.4)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று பரிந்துரை செய்யப்பட்டது.**

**–––––**

**253)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.49, வெடத்தலாங்காடு தெற்குத் தோட்டம் மயானப் பகுதியில் எரிவாயு தகனமேடை புதிததாக கட்டப்பட்டு பொதுமக்களை பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. அவ்வாறு பொது மக்கள் தகனம் செய்ய வரும்போது பொது மக்களின் வாகனங்கள் நிறுத்தவும், பொது மக்கள் அதிகமாக நிறைந்தும் ஏற்பட வாய்ப்புள்ளதால் அந்தப் பகுதியை சுற்றியுள்ள சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். எனவே மயானப் பகுதி வளாகத்தினுள் மண் நிரப்பி சிமெண்ட் கற்கள் பதித்து வாகனங்கள் நிறுத்துவதற்கு, பொது மக்கள் கூடி நிற்பதற்கு ஏதுவாகவும், சுற்றியுள்ள சாலையின் நெரிசலை தவிர்க்கவும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**–––––**

**(ஒம்) மா.அசோகன்**
**தனி அலுவலர்**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**

# திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**254)** இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு சிக்குனியா மற்றும் மலேரியா காய்ச்சல்களை பரப்பும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை –5 அவர்களின் கடித ந.க.எண்.1588/2015/ஜே.1 மற்றும் கடித ந.க.எண்.2571/ஜெ1 / 2017 நாள் 14.02.2017ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட கொசு தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசு புகை மருந்தான “Pyrethrum 2% Extract” என்ற மருந்து டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு 4 மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் விடுபடாமல் காலை, மாலை இருவேளைகளிலும் Indoor மற்றும் Outdoor Fogging Operation பணி மேற்கொள்ள ஏதுவாக மேற்படி மருந்து இருப்பு குறைவாக இருப்பதால் அவசர அவசியம கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 2018–2019ம் ஆண்டிற்கு தேவைப்படும் மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 019/M(P) / TNMSC / INSECT / 2015 நாள் 12.01.2016 மற்றும் 01.06.2017ன்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் “Pyrethrum 2% Extract” மருந்தை 6000 லிட்டர் வாங்க நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.70.50 ( GST உட்பட) லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சி 2018–2019ம் ஆண்டிற்கு கொசு தடுப்பு பணிக்கு முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க கொசுபுகை மருந்தாக பயன்படும் 6000 லிட்டர் “Pyrethrum 2% Extract” மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் சென்னை அவர்களின் மேற்கண்ட கடிதத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் அதற்காகும் மேற்கண்ட செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 1698 / 2018 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**255)** இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு சிக்குனியா மற்றும் வைரஸ் காய்ச்சல்களை பரப்பும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.1588/2015/ஜே.1 மற்றும் கடித ந.க.எண். 2571/ஜெ1 / 2017 நாள் 14.02.2017ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நல்ல தண்ணீரில் உருவாகும் கொசுபுழுக்களை கட்டுப்படுத்த தண்ணீரில் ஊற்றப்படும் கொசு புழுதடுப்பு மருந்தான பணிக்கு Temephos Emulsifiable 50% என்ற மருந்து இம்மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் வீடுகள் தோறும் உள்ள தண்ணீர் தொட்டி மற்றும்

**255–ன் தொடர்ச்சி**

அனைத்து நல்ல நீர்நிலைகளிலும் ஊற்றி கொசு புழுக்களை கட்டுப்படுத்த தேவைப்படும் மேற்படி மருந்து இருப்பு குறைவாக இருப்பதால் 2018–2019 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் மேற்படி மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.019 / M (P)/ TNMSC / INSECT / 2015 நாள் 12.01.2016ன்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் 6000 லிட்டர் மருந்தை வாங்கவும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.40.50 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சி 2018–2019ம் ஆண்டிற்கு கொசு தடுப்பு பணிக்கு கொசுப்புழு மருந்தாக பயன்படும் Temephos Emulsifiable 50% என்ற மருந்து 6000 லிட்டரை மேற்கண்ட கடிதத்தின்படி தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் அதற்காகும் செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 1697/ 2018 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

––––––

**256)** இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.2.–க்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் டி.வி. விளம்பர அறை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018–19ஆம் ஆண்டிற்கு ( 07.03.2018, 20.03.2018, 26.03.2018– 05.04.2018 ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 05.04.2018 அன்று 4வது முறை நடைபெற்ற குறுகிய கால மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு எஸ். ராஜேந்திரன், திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 90,000/–க்கு கோரியுள்ளார்.

மேற்படி குத்தகை தொகை ரூ.90,000/– ஆனது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.88,751/–யை காட்டிலும் ரூ. 1249/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.73,558/–யை விட ரூ. 16,442/–அதிகமாக உள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக கோரியுள்ள தொகை கூடுதலாக இருப்பதால், இவ்வினத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை அனுபவித்துக் கொள்ள திரு எஸ். ராஜேந்திரன், என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

திரு எஸ். ராஜேந்திரன், திருப்பூர் என்பவரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 90,000/– கடந்தாண்டு குத்தகை தொகைக்கும், மூன்றாண்டு சராசரித் தொகைக்கும் கூடுதலாக இருப்பதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரையும் மற்றும் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் புதுப்பித்துக் கொண்டு மேற்படி இனத்தை அனுபவித்துக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( அ.1 / 843 / 2018)

– – – ––

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

––––––

**257)** இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.3–க்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் வண்ண தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் அறைக்கு 2018–19ஆம் ஆண்டிற்கு ( 07.03.2018, 20.03.2018, 26.03.2018– 05.04.2018 ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 05.04.2018 அன்று 4வது முறை நடைபெற்ற குறுகிய கால மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு நூர்முகம்மது, திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 4,45,000/–க்கு கோரியுள்ளார்.

மேற்படி குத்தகை தொகை ரூ.4,45,000 ஆனது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.4,25,040/–யை காட்டிலும் ரூ. 19,960/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.3,46,134/–யை விட ரூ. 98,866/–அதிகமாக உள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக கோரியுள்ள தொகை கூடுதலாக இருப்பதால், இவ்வினத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை அனுபவித்துக் கொள்ள திரு நூர்முகம்மது என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

திரு நூர்முகம்மது ,திருப்பூர் என்பவரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 4,45,000/– கடந்தாண்டு குத்தகை தொகைக்கும், மூன்றாண்டு சராசரித் தொகைக்கும் கூடுதலாக இருப்பதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரையும் மற்றும் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் புதுப்பித்துக் கொண்டு மேற்படி இனத்தை அனுபவித்துக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( அ.1 / 843 / 2018)

– – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

———

**258)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும் சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01–12–2017ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 22–11–2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம். அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30–11–2017ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே 01–05–2018 முதல் 31–05–2018 வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( இ.1 / 6112 / 2017)

– – – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

———

**259)** திருப்பூர் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள நொய்யல் ஆற்றின் குறுக்கே, நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள், மேம்பாட்டு திட்டத்தில் ( I & A) கீழ்காணும் பகுதிகளில் பாலங்கள் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 10597 /2017 / பி.1ல் நாள் 26–02–2018ல் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்புமாறு தெரிவித்துள்ளார். அதன்படி கீழ்காணும் பகுதிகளை ஆய்வு செய்து திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சக்தி தியேட்டர் மற்றும் ஈஸ்வரன் கோவில் வீதியை இணைக்கும் வகையில் மறு பாலம் கட்டுதல் | 910 |
| 2 | AITUC காலனி மற்றும் மணியகாரம்பாளையம் சாலையை இணைக்கும் வகையில் புதிய பாலம் கட்டுதல் | 620 |

மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் கருத்துருவை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலமாக நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்புதல் பெறுவதற்காக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 671 / 2017)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

———

**260)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3 மற்றும் மண்டலம் எண்.4, பகுதிகளில் உள்ள இரு இணைப்புச் சாலைகளை மாநகராட்சி பராமரிப்பில் இருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தமது 09–04–2018ம் தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

**<u>சாலை விபரம்.</u>**

1. வீரபாண்டி வட்டசாலையிலுள்ள காளிகுமாரசாமி கோவில் முதல் கோவில்வழியில் உள்ள தாராபுரம் பிரதான சாலை வரை – 2972 மீட்டர்.
2. செவந்தாம்பாளையம் – முத்தணம்பாளையம் வட்டச்சாலை பகுதியிலிருந்து தாராபுரம் பிரதான சாலை வரையுள்ள கோவில்வழி இணைப்பு சாலை 2966 மீட்டர்

மேற்கண்ட இரு இணைப்பு சாலைகளும், திருப்பூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட போது அப்போதைய ஊராட்சிப் பகுதிகளில் அமைந்திருந்த சாலைகள் ஆகும். இச்சாலை இதற்கு முன்னர் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது அப்பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் 2011 முதல் மாநகராட்சி கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி இருஇணைப்புச் சாலைகளும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சுற்றுச் சாலையிலிருந்து தாராபுரம் சாலையான பிரதான நெடுஞ்சாலையினை இணைக்கும் வகையில் உள்ளன.

மேலும் அப்பகுதிகள் அதிக வளர்ச்சி அடைந்து வருவதால் மேற்படி இரு சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்தால், சாலை மேம்பாட்டுப் பணிகள் விரைவாக மேற்கொள்ள இயலும் என்று பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தமது 09–04–2018ம் தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

**260–ன் தொடர்ச்சி**

எனவே மேற்குறிப்பிட்ட இரு இணைப்பு சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 588 / 2018 / ம.3 )

– – – – –

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

––––––

**261)** இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.2.–க்குட்பட்ட பழைய பேருந்து நிலைய வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018–19ஆம் ஆண்டிற்கு ( 07.03.2018, 20.03.2018, 26.03.2018, 05.04.2018 மற்றும் 25.04.2018 ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 25.04.2018 அன்று 5வது முறை நடைபெற்ற குறுகிய கால மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருமதி கே. தமிழரசி, திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 15,15,000/–க்கு கோரியுள்ளார்.

மேற்படி குத்தகை தொகை ரூ.15,15,000/– ஆனது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.14,30,025/–யை காட்டிலும் ரூ. 84,975/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.12,43,500/–யை விட ரூ. 271,500/–அதிகமாக உள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக கோரியுள்ள தொகை கூடுதலாக இருப்பதால், இவ்வினத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை அனுபவித்துக் கொள்ள திருமதி கே. தமிழரசி, திருப்பூர் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

திருமதி கே. தமிழரசி, திருப்பூர் என்பவரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.84,975/–கடந்தாண்டு குத்தகை தொகைக்கும், மூன்றாண்டு சராசரித் தொகைக்கும் கூடுதலாக இருப்பதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரையும் மற்றும் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் புதுப்பித்துக் கொண்டு மேற்படி இனத்தை அனுபவித்துக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( அ.1 / 843 / 2018)

– – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

––––––

**262)** திருப்பூர் மாநகராட்சி மற்று மைய அலுவலகங்களுக்கு தேவையான எழுது பொருட்கள், டோனர்கள் திருப்பூர் மாவட்ட அரசு அங்கீகாரம் பெற்ற நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட், 924 திருப்பூர் நிறுவனத்தில் கொள்முதல் 2018–19 ஆம் ஆண்டுக்கு உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும் ) செலவு பட்டியல் தொகை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம். 2018–19 ஆம் ஆண்டுக்கு எழுதுபொருட்கள், டோனர்கள், திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை லிட் 924ல் பெறுவதற்கு அனுமதிக்கலாம்.

(அ.1 / 1742 / 2018 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

––––––

**263)** தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள் 25–01–2018ன்படி மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள்/மாநகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ( சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்க உரிய பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். ஆர் 1/7234 / 2014 நாள் 15.03.2018ம் நாளைய சுற்றறிக்கையின்படி, மேற்படி கல்வி பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு வரி விதிப்பு தொடர்பான அளவீட்டுப் பணிகள் யாவும் சரியாகவும் தெளிவாகவும், நுணுக்கமாகவும் எவ்வித முறைகேடுகளும் இன்றி சம்மந்தப்பட்ட மாநகராட்சி பொறியாளர்கள் / செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் / இளம்பொறியாளர் / ஆய்வாளர்களால் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும் இதன்படி 2017–18ம் இரண்டாவது அரையாண்டுக்குரிய கேட்பு நிர்ணயம் செய்து 15.04.2018க்குள் பணிகளை நிறைவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க. எண். ஆர்.1/7234 / 2014 நாள் 28.03.2018ல் மேற்படி சட்டத்திருத்தத்தின்படி மாநகராட்சி பகுதிகளிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு வரி விதிப்பு செய்திட ஏதுவாக மாநகராட்சி ஆணையர் உரிய அறிவிப்பு வெளியிடப்படுதல் வேண்டுமெனவும், மாதிரி வரைவு அறிவிப்பினை கூர்ந்தாய்வு செய்து மன்ற அனுமதி பெற அறிவிப்ப செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ள 30 நாட்களில் பெறப்படும் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து இறுதி செய்து அரசிதழில் அறிவிப்பு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி,

- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123 (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981, பிரிவு 123(சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்கள் தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123 (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புக்களை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்,
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123 (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 118—ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழி அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் இதற்கான இனைத்து செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.
2. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 118—ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்து, அவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பெறப்படும் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் மீது இறுதி நடவடிக்கைகள் மேற்கொண்டு மாவட்ட அரசிதழில் உரிய அறிவிப்பினை பிரசுரம் செய்யவும், அதற்கான அனைத்து செலவீனங்களுக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க. எண். அ.1 / 5175 / 2018)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று ஒப்புதல் வழங்கப்பட்டது.**

——————

**(ஒம்) மா.அசோகன்**
**தனி அலுவலர்**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**